★ பக்கங்கள் 6 விலை சதம் 40

# ஈழநாடு

The EELANADU

மலர்: 20 மார்கழி 18 ஏபர் 2 இதழ்: 319

யாழ்ப்பாணம் செவ்வாய்க்கிழமை 2 1-79

## இராணுவம் இடமாற்றம்

(யாழ்ப்பாணம்)

அண்மையில் ஏற்பட்ட அசம்பாவிதங்களைத் தொடர்ந்து வடபகுதி இராணுவத்தினர் இடமாற்றத்துக்குள்ளாகியுள்ளனர்.

வல்வெட்டித்துறை இராணுவ முகாமைச் சேர்ந்த இராணுவத்தினர் தலைமன்னாருக்கும், தலைமன்னார் இராணுவ முகாமைச் சேர்ந்த இராணுவத்தினர் வல்வெட்டித்துறைக்கும் மாற்றப்பட்டுள்ளனர்.

## கைத்தறி நெசவாலைகள் மூடப்படும் அபாயம்

### நூல்விலை உயர்வு காரணம்

(உடுப்பிட்டி)

நெசவு நூல் விலை அதிகரிப்பைத் தொடர்ந்து வடபகுதியில் உள்ள நூற்றுக்கும் அதிகமான கைத்தறி நெசவாலைகள் மூடப்படும் அபாய நிலை தோன்றியுள்ளது.

இவ்விலை அதிகரிப்பைத் தொடர்ந்து உள்ளூர் கைத்தறிப் புடவைகளின் விலையை உயர்த்த வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டுள்ளதால் வடபகுதி கைத்தறி நெசவு உற்பத்தியாளர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளதாக கைத்தறியாளர் ஒருவர் தெரிவித்தார்.

அத்துடன் வெளியூர்ப் புடவைகள் பெருமளவில்

(6-ம் பக்கம் பார்க்க)

UNIVERSITY OF JAFFNA 1979 -02 PERIODICALS DIVISION LIBRARY

# ஆனந்தனின் மரதன் 'டுவிஸ்ட்'

# ஆறு நாட்களாக ஆடுகின்றார்!

## 30 மணி நேரம் கூடுதலாக 'டுவிஸ்ட்' நடனமாட திட்டம்

### ஜனாதிபதி, சிவா நேரில் பாராட்டு



(நமது நிருபர்)

உலக 'டுவிஸ்ட்' நடனசாதனையை முறியடித்து, புதிய உலக 'டுவிஸ்ட்' சாதனையை ஞாயிறு இரவு நிலைநாட்டிய 'சாதனை வீரன்' ஆழிக்குமரன் ஆனந்தன் இன்றிரவுவரை தொடர்ந்து 'டுவிஸ்ட்' நடனம் ஆடுவார் கலிபோர்னியாவைச் சேர்ந்த நை என்பவர் 1973ல் ஏற்படுத்திய உலக டுவிஸ்ட் சாதனையிலும் பார்க்க கூடுதலாக முப்பது மணி நேரத்துக்கு மேல் நடனம் ஆடி, சாதனை ஏற்படுத்த ஆழிக்குமரன் ஆனந்தன் திட்டமிட்டுள்ளார்.

ஆறு தினங்களாகத் தொடர்ச்சியாக மரதன் டுவிஸ்ட் நடனம் ஆடிக்கொண்டிருக்கும் ஆனந்தன், நேற்று பாடவும் தொடங்கினார்! ஒலிவாங்கியை கையில் எடுத்துக்கொண்டு அவர் பின்னணி இசைக்கு ஏற்ப பாடத்தொடங்கியதும் அங்கு கூடியிருந்த ரசிகப்பெருமக்கள் மகிழ்ச்சி ஆரவாரம் செய்து, ஆடலுடன் பாடவும் தொடங்கிவிட்டனர்!

### ஜனாதிபதி, சிவா பாராட்டு

நேற்றுக் காலை 7-30 மணியளவில் ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தனா நேரில் மேடைக்கு சென்று ஆனந்தனுக்கு பாராட்டுதல்கள் தெரிவித்தார். "சிறப்பாகச் செய்திருக்கிறீர்கள். எனது பாராட்டுதல்கள்" என்று ஆனந்தனிடம் மகிழ்ச்சி ததும்பக் கூறினார்.

தமிழர் விடுதலைக்கூட்டணித் தலைவர் திரு எம். சிவசிதம்பரமும் நேற்று பதினொரு மணியளவில் சென்று ஆனந்தனை பாராட்டினார். திரு. சிவசிதம்பரத்தின் வாழ்த்துக்கள் மிகவும் உற்சாகத்தை தந்ததாக திரு ஆனந்தன் நமது நிருபரிடம் குறிப்பிட்டார்.

### புதன்கிழமை ஆரம்பம்

ஆழிக்குமரன் குமார் ஆனந்தன் தனது இடைவிடாத 'டுவிஸ்ட்' நடனத்தை கடந்த புதன்கிழமை மாலை சரியாக 5-45க்கு காலிமுகத்திடலின் மூன்றலில் உள்ள இரவுச் சந்தை அமைந்திருக்கும் இடத்தில் விசேஷமாக அமைக்கப்பட்டிருக்கும் மேடையில் ஆரம்பித்தார். அவர் ஆட ஆரம்பித்ததும், கூடவே அவருடன் நண்பர்கள் பலரும் ஆடத் தொடங்கினார்கள்.

### மனைவியும் 'சாதனை'

ஆழிக்குமரனின் ஒவ்வொரு நடன அசைவுகளையும் கண் வெட்டாமல் பார்த்திருந்து ஆரோக்கியமான பதார்த்த உணவுவகைகளை அவசியம் ஏற்படும்போது தமது கணவருக்கு அன்புடன் வழங்கிக்கொண்டிருந்த ஆனந்தனின் மனைவி மாவெல், மூன்று நாட்களுக்கு மேலாக இரவு பகலாகக் கண்விழித்து ஒரு 'சாதனை' புரிந்திருக்கிறார்! நடனம் ஆடிக்கொண்டிருந்த கணவனுக்கு சற்றுக் களைப்பு ஏற்படும்போதெல்லாம், மேடையில் ஏறி தமது கணவருடன் நடனம் ஆடத் தொடங்கிவிடுவார் இதனைக் கண்டு ஆனந்தனின் குழந்தைகள் இருவரும்கூட 'டுவிஸ்ட்' ஆடத் தொடங்கிவிடுவார்கள்.

### வெளிநாட்டு நிருபர்கள்

தொடர்ச்சியான 'டுவிஸ்ட்' நடனத்தில் புதிய உலக சாதனையை நிலைநாட்டிய ஆனந்தனைப் புகைப்படம் எடுக்கவும் பேட்டி காணவும் ஏராளமான நிருபர்கள் நேற்று ஆனந்தன் நடனமாடிக்கொண்டிருக்கும் மேடைக்குச் சமீபமாகக் குழுமியிருந்தனர். பல வெளிநாட்டு செய்தி நிறுவனங்களைச் சேர்ந்த நிருபர்கள் பலர் நீண்ட நேரமாக இங்கு ஆனந்தனைக் கவனித்துக் கொண்டிருந்தனர்.

### ஐந்து நிமிட நேர ஓய்வு

ஞாயிறு நள்ளிரவுடன் புதிய உலக சாதனையை நிலைநாட்டியதன்பின்னர், ஒவ்வொரு மணி நேரத்தின்போதும் ஐந்து நிமிட நேர ஓய்வை ஆனந்தன் எடுத்துக்கொண்டார் இந்த நேரத்தில் அவர் துயில்

(6-ம் பக்கம் பார்க்க)

## யாழ். நகரமண்டபம் மீண்டும் மக்கள் சொத்தாக வேண்டும்

### முன்னாள் மேயர் நாகராசா வலியுறுத்து

[யாழ்ப்பாணம்]

"யாழ்ப்பாண நகரமண்டபம் மீண்டும் மக்களுக்குப் பயன்படக்கூடியதாக மக்களின் சொத்தாக இருக்கவேண்டும். புதிதாகத் தேர்ந்தெடுக்கப்படும் யாழ்ப்பாண மாநகர சபை தனது முதல் கடமையாக நகர மண்டபத்தை மக்கள் சொத்தாக்கவேண்டும்".

இவ்வாறு யாழ் நகரின் முன்னாள் மேயர் திரு. சி நாகராசா சென்ற சனிக்கிழமை மாலை யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் யாழ். கலாக்ஷேத்திரமளித்த "ராதாகிருஷ்ணன்" நாட்டிய நாடகத்திற்குப் பிரதமவிருந்தினராகக் கலந்து கொண்டுபேசியபோது குறிப்பிட்டார். அவர் மேலும்குறிப்பிட்டதாவது:

கலைத்துறை வளர்ச்சியடைவதற்குக் கலைஞர்களின் திறமையும் கடும் உழைப்பும் மட்டும் போதாது. கலாரசிகர்களது ஆதரவும் ஒத்துழைப்பும் அவசியமாகும்.

மேடைவசதி, மண்டபவசதிகள் கலைவளர்ச்சிக்கு இன்றியமையாதன. யாழ் நகரில் பொதுமக்களின் சொத்தாக, பொதுமக்களின் உபயோகத்துக்காக இருந்த யாழ் நகர மண்டபம் இப்போது படமாளிகையாக உபயோகப்படுத்தப்படுவது கண்டிக்கவேண்டிய விஷயம். இந்த மண்டபம் மீண்டும் மக்களின் உபயோகத்துக்காகப் பயன்படவேண்டும்; மக்களின் சொத்தாக வேண்டும். புதிதாகத் தெரிவுசெய்யப்படும் மாநகரசபை முதல் வேலையாக நகரமண்டபத்தை மீண்டும் மக்களின் சொத்தாக்க வேண்டும். யாழ் நகரில் ஒலி, ஒளி மற்றும் நவீனவசதிகளும் மற்றுமொரு புதியநகரமண்டபம் நிறுவுவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டிய அவசியம்.

இப்போது உபயோகமற்றிருக்கும் நல்லூர்கல்யாணமண்டபத்தையும் மக்கள் பயன்படுத்தக்கூடியவகையில் புனரமைக்க வேண்டியதவசியமென்றும் திரு. நாகராசா கூறினார்.

## இந்திரா கண்டனம்

ஹைதராபாத், ஜன. 1

"ஜனதா கட்சி அரசாங்கம் நாட்டை வெளிநாடுகளி

(6ம் பக்கம் பார்க்க)

# எனது அடுத்தசாதனை 7 நாள் இரவுபகல் சயிக்கிள் ஓட்டம்!

## ஆழிக்குமரன் ஆனந்தன் கூறுகிறார்

(கொழும்பு)

"1979-ம் ஆண்டு முடிவடைவதற்குள், நான் பத்து உலக சாதனைகளை ஏற்படுத்தியே தீருவேன்" என்று சாதனை வீரன் ஆழிக்குமரன் ஆனந்தன் நேற்று சவால் விட்டார்.

டுவிஸ்ட் நடனத்தில் உலக சாதனையை நிலைநாட்டிய பின்னர் நேற்று 5 நிமிட ஓய்வுநேரத்தின்போது நமது நிருபருக்கு அளித்த பேட்டியிலேயே மேற்கண்ட தகவலை வெளியிட்டார். தமது சுருக்கமான இப்பேட்டியில் அவர் மேலும் தெரிவித்தாவது:

"டுவிஸ்ட் நடனத்தில் நான் விசேஷ பயிற்சி; இதனை மேலும் தெளிவாகச் சொல்லப்போனால் அரை மணிநேர பயிற்சிகூடப் பெறவில்லை. ஆனால் துயில்கொள்ளாமலிருக்க பயிற்சி பெற்றேன். எனது இலட்சியம், இவ்வருடம் முடிவடைவதற்குள் பத்து உலக சாதனைகளை ஏற்படுத்தியாக வேண்டும். ஏற்கனவே மூன்று சாதனைகள், டுவிஸ்ட்டுடன் நான்கு சாதனைகள் புரிந்துவிட்டேன். இன்னும் ஆறு சாதனைகள் நிலைநாட்டப்பட வேண்டும். எனது அடுத்த சாதனைகளில் ஒன்று - ஏழு தினங்கள் இரவு பகலாக சைக்கிள் ஓடுவது. எனக்கு என்னில் நம்பிக்கை உண்டு சாதனைகள் புரிய வேண்டும் என்ற வைராக்கிய மனம் உண்டு நினைத்ததை நிச்சயம் சாதிப்பேன்" என்று சிரித்தவாறே கூறினார் சாதனை வீரன் ஆனந்தன்.

முதலிலேயே ஆக்கப்படும் முற்றுன கட்டளை பற்றிய

## அறிவித்தல்

மல்லாகம் மாவட்ட நீதிமன்றத்தில்

தெல்லிப்பழை கிழக்கைச் சேர்ந்த கனகராயர் கைம்பெண் அருந்தவநாயகி என்பவரின் மரண சாதனத்தின் விடயத்தில் மரணமெய்தியவர்

தெல்லிப்பழை கிழக்கு கனகநாயகம், ஜனநாயகம் மனுதார்

மரணசாதன )
நியாயாதிக்கம்)
இல. 25

மேலேயுள்ள இலக்கங்கொண்ட வழக்கு மேலே பெயர் குறிப்பிட்டவரான மரணமெய்தியவரின் மரண சாதனத்தை எண்பிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டுள்ள தெனவும் 1978ம் ஆண்டு ஐப்பசி மாதம் 31 ஆந்நாளன்று, அதில் அதற்கிணங்க முதலிலேயே முற்றுன கட்டளை பதியப்பட்டுள்ள தெனவும் இத்தால் அறிவிக்கப்படுகின்றன.

நீதிமன்றக் கட்டளைப்படி
றி. ஜெயராசசிங்கம்
பதிவாளர்.

1978ம் ஆண்டு ஐப்பசி மாதம் 31ஆந்நாளன்று தேதியிடப்பட்டது.
என்னுல் எழுதப்பட்டது.
செ. இராமலிங்கம்
மனுதாரின் சட்டத்தரணி.
மல்லாகம். 1181

## பின்னுறுதிக் கட்டளை பற்றிய அறிவித்தல்

(இல. 84அ—பிரிவுகள் 524, 532)

பருத்தித்துறை மாவட்ட நீதிமன்றத்தில்

கரவெட்டி மேற்கு காலஞ் சென்ற வஸ்தியாம்பிள்ளை அந்தோனிப்பிள்ளை என்பவரின் மரண சாதனத்தின் / மரண சாதனமில்லாச் சொத்தின் விடயத்தில்.

மரணமெய்தியவர்
கரவெட்டி மேற்கு வஸ்தியாம்பிள்ளை அந்தோனிப்பிள்ளை கைம்பெண் லோடிஸ் ஜெயமணி.
மனுதார்.

மரணசாதன )
நியாயாதிக்கம்) இல. 1061
கரவெட்டி மேற்கு

1. றெஜினெல்ட் இம்மனுவேல் ஜெயரத்தினம் அந்தோனிப்பிள்ளை.
2. சாமிநாதர் அல்பிரட் ஜோசேப்.
3. பெண் றெஜிஞ ஜெயதேவி.
4. அந்தோனிப்பிள்ளை மகள் அக்கினஸ் ஜெயசோதி.

மேலேயுள்ள இலக்கங்கொண்ட மரணசாதன வழக்கு மேலே பெயர் குறிப்பிடப்பட்ட இறந்துபோனவரின் மரண சாதனத்தை எண்பிப்பதற்காக / மரணச் சொத்தை நிருவகிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு, அதில் அதற்கிணங்கப் பின்னுறுதிக் கட்டளை பதியப்பட்டுளளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

அக்கறையுள்ள ஆள் எவரும், 1979 ஆம் ஆண்டு மாசி மாதம் 23 ஆந் நாளன்று முற்பகல் 9-0 மணிக்கு இந்நீதிமன்றத்தில் முன்னர்தோன்றி, அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக் கட்டளை ஏன் முற்றுன தாக்கப்படலாகாதென்பதற்குக் காரணங்காட்டுமாறு, இத்தால் தேவைப்படுத்தப்படுகின்றார்.

நீதிமன்றக் கட்டளைப்படி
ஒப்பம்
பதிவாளர்

வரைவு:
க. வ. சுப்பிரமணியம்
மனுதார் சட்டத்தரணி.

1978 ஆம் ஆண்டு மார்கழி மாதம் 21 ஆந் நாளாகிய இன்று தேதியிடப்பட்டது 1193

இ. சிவரத்தினம்,
சட்டத்தரணியும்
பிரசித்த நொத்தாரிசும்,
இல. 36, ரெம்பிள் ரோட்,
யாழ்ப்பாணம்.

மல்லாகம் மாவட்ட நீதிமன்றம்

## பின்னுறுதிக்கட்டளை பற்றிய அறிவித்தல்

புன்னாலைக்கட்டுவன் நெல்லியர் கனகசபை என்பவரின் மரணசாதனமில்லா மரண சொத்தினதும் உடமை பொருள்களினதும் விடயத்தில்.

மரணமெய்தியவர்.
கனகசபை சிறீதரன், புன்னாலைக்கட்டுவன் வடக்கு, புன்னாலைக்கட்டுவன், தற்பொழுது சத்தோல், மிடில்செக்ஸ், லண்டன்.
மனுதார்.

மரண சாதன நியாயாதிக்கம்.
இல. ரி/24.

எதிராக
1. நெல்லியர் செல்லத்துரை
2. செல்லத்துரை கைம்பெண் ஞானம்மா,
இருவரும் புன்னாலைக்கட்டுவன் வடக்கு, புன்னாலைக்கட்டுவன்
எதிர்வாதிகள்.

மேலே குறித்த இலக்கம் கொண்டமரண சாதனவழக்கு மேலே பெயர் குறிப்பிடப்பட்ட இறந்துபோனவரின் மரணசாதனமில்லா மரண சொத்தை நிர்வகிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு, அதில் அதற்கிணங்கப் பின்னுறதிக் கட்டளை பதியப்பட்டுளள தென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

அக்கறையுள்ள யாரேனும் 1979ம் ஆண்டு மாசி மாதம் 9ந் திகதியன்று முற்பகல் 9-00 மணிக்கு இந்நீதிமன்றத்தின் முன்தோன்றி அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக்கட்டளை ஏன் முற்றுனதாக்கப்படலாகாதென்பதற்குக் காரணம் காட்டுமாறு இத்தால் தேவைப்படுத்தப்படுகின்றீர்.

நீதிமன்றக் கட்டளைப்படி,
1978ம் ஆண்டு ஐப்பசி மாதம் 27ந் திகதி.
றிச்சேட்ஸ் ஜெயராசசிங்கம்.
பதிவாளர்.

என்னுல் தயாரிக்கப்பட்டது
இ. சிவரத்தினம்,
மனுதாரின் சட்டத்தரணி.
1171

## யாழ். கிளை திறக்கப்படும்?

[கொக்குவில்]

கடந்த 77ம் ஆண்டு ஆகஸ்ட் கலவரகாலத்தில் யாழ்ப்பாணத்தில் மூடப்பட்ட லக்சலா கிளை வெகுவிரைவில் மீண்டும் திறப்பதற்கான முயற்சியினை யாழ். மாவட்ட சிறுகைத்தொழில் இலாகா அத்தியட்சகர் திரு. விஸ்வலிங்கம் மேற்கொண்டுவருகிறுர்.

### மன்னாரிலும் லக்சலாக் கிளை

இவரது விடாமுயற்சியால் மன்னாரிலும் ஒரு லக்சலாக் கிளை திறக்கப்படவிருக்கிறது.

மன்னார் லக்சலாக்கிளையை சிறுகைத்தொழில் இலாகா பிரதிப் பணிப்பாளர் திரு வி ஜீ. ரத்திஞயக்கா இம்மாதம் 3ம் திகதி திறந்துவைப்பார்.

பன்முகப்படுத்தப்பட்ட வரவு-செலவுத் திட்டத்திலிருந்து இக்கிளையை அமைப்பதற்கான நிதியை மன்னார் அரசாங்க அதிபர் திரு. ஜெயநாதன் ஒதுக்கியுள்ளார்.

## உற்சவம்

[யாழ்ப்பாணம்]

குரும்பசிட்டி அம்பாள் ஆலய மகோற்சவம் நாளை புதன்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிறது. 11ம் திகதி வியாழக்கிழமை தேர்த்திருவிழாவும், 12ம் திகதி தீர்த்தத்திருவிழாவும், அடுத்தநாள் பூங்காவனமும் நிகழும். [அ]

## கதாப்பிரசங்கம்

(யாழ்ப்பாணம்)

வண்ணார்பண்ணை ஸ்ரீ விஸ்வலிங்க மகாகணபதி [பன்றிக்கோட்டுப்பிள்ளையார்] கோவிலில் விநாயகர் விரத 19-ம் நாளாகிய இன்று 'சூரசம்காரம்' என்னும் சங்கீத கதாப்பிரசங்கம் பிரம்மஸ்ரீ சிவ. வை. நித்தியானந்த சர்மாவினுல் நடாத்தப்படுகின்றது. [ஊ]

[சுழிபுரம்]

பண்ணாகம் விசவத்தனை தோட்டக்காணிகளில் வெங்காயம் நட்ட பலருக்குப் பலத்த நஷ்டம் ஏற்பட்டுள்ளது. மழைவெள்ளம் காணிகளில் தேங்கி நிற்பதால் வெங்காயம் அழுகி நாற்றம் எடுக்கின்றது. இதனுல் தோட்டச் செய்கையாளருக்கு பல்லாயிரக்கணக்கான ரூபா நஷ்டம் ஏற்பட்டுள்ளது. (அ)

## ஈட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம் மாவட்ட நீதிமன்றத்தில் ஈடு / 13652 இலக்க வழக்கில் வாதி யாழ்ப்பாணம் சுண்டிக்குழி கபேரியல் இம்மனுவலுக்கு விற்பனவு திகதிவரை போகவேண்டிய தீர்வைத் தொகை 3,342 ரூபா 44 சதமும் வழக்குச் செலவு 465 ரூபா 70 சதமும், பின்ஏற்பட்ட விற்பனவுச் சலார்களும் இதில் கொடுபட்ட ரூபா 1.100/-கழித்து மிகுதித் தொகையை பிரதிவாதிகளாகிய யாழ்ப்பாணம், நவாலி, வஸ்தியாம்பிள்ளை அருளானந்தத்திடமும் ரூப்பியல் பேதுருவிடமும் அறவிடுதற்காக எனக்களித்த அதிகாரத்தின்படி வழக்கில் சம்பந்தப்பட்ட கீழ்விபரிக்கப்படும் ஆதனம் 24-01-1979 புதன்கிழமை காலை 10-00 மணி தொடக்கம் அவ்வாதனத்தில் நின்று பிரசித்த ஏலத்தில் என்னுல் விற்கப்படும்.

### ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாண மாவட்டம் வலிகாமம் மேற்குப் பகுதி மானிப்பாய் கோவிற்பற்று நவாலி இறை வடக்கில் நீண்டகால ஆட்சியிலுள்ள 'கலையான் தோட்டம்' நில பர. 1¼ கல்வீடும் கிணறும் பயிர்களும். இதற்கு எல்லை கிழக்கும் வடக்கும் ஒழுங்கை, மேற்கு சின்னத்தம்பி யோர்ச்சினதும், மோசஸ் அந்தோனியினதும் ஆதனங்கள் தெற்கு பூகோனப்பர் மனைவி திரேசம்மாவினுதனம் அதைச் சேர்ந்தவைகளுடன் முழுவதும்.

வி. செ. குட்டிப்பிள்ளை,
நீதிமன்ற விற்பனை ஆணையாளர்

'இராச கிரி'
643, கே. கே. எஸ். வீதி,
யாழ்ப்பாணம். 1203

## யாழ்ப்பாணக் கல்லூரி

யாழ்ப்பாணக்கல்லூரி திரும்பவும் கையளிக்கப்பட்டதையிட்டு 1979ஆம் ஆண்டு தைமாதம் 9ந் திகதி செவ்வாய்க்கிழமை காலை 9-00 மணிக்கு வட்டுக்கோட்டைத் தேவாலயத்தில் விசேட தோத்திர ஆராதனை ஏறெடுக்கப்படும் இம்மகிழ்ச்சியான வைபவத்தில் பங்குபற்றுமாறு பழைய மாணவர், பெற்றுர் அன்பர்கள் யாவரும் அன்புடன் அழைக்கப்படுகின்றனர்.

அதிபர்.

வட்டுக்கோட்டை. 1213

## வரி விளம்பரம்

### தேவை

பலசரக்கு மாளிகைக்கு விற்பனையாளர் தேவை. 20 வயதுக்கு உட்பட்ட இரண்டு வருட வியாபார அனுபவம் உள்ளவர் விரும்பத்தக்கது. நற்சாட்சிப் பத்திரங்களுடன் நேரில் வரவும். மு. க. தருமலிங்கம், 412, கே. கே. எஸ் வீதி, வண்ணார் பண்ணை, யாழ்ப்பாணம். 1190

### விற்பனைக்கு

E. N. 3000 தொடரிலக்க போட்கொன்சல் மார்க் I கார் நல்ல நிலையில் விற்பனைக்குண்டு. 43/1, மின்சார நிலைய வீதி, 2ம் ஒழுங்கை, யாழ்ப்பாணம். 1209

## மிளகாய் விலை வீழ்ச்சி

[உருத்திரபுரம்]

கிளிநொச்சியில் தற்போது மிளகாய்விலை வீழ்ச்சி அடைந்து வருகிறது.

கடந்த இரண்டு வாரங்களுக்கு முன்பாக ஒரு ருத்தல் செத்தல்மிளகாயை 9 ரூபா 50 சதம் முதல் 10 ரூபாவரை கொள்வனவு செய்துவந்த வியாபாரிகள் நத்தார் பண்டிகையின் பின்பு 8 ரூபா முதல் 8 ரூபா 50 சதம்வரை கொள்வனவுசெய்து வருகின்றனர்.

வெங்காயத்தின் விலையும் சற்று வீழ்ச்சியடைந்துள்ளது. இதேநேரத்தில் காய்கறிகளின் விலை மிகவும் உச்சக்கட்டத்தை அடைந்துள்ளன.


# உங்கள் பிள்ளையை கண்பார்வை இழக்கச் செய்யாதீர்கள்



உங்கள் பிள்ளை 16 வயதுக்குக் குறைந்ததாகவும் கண்பார்வை பாதிக்கப்பட்டுமிருக்கிறதா?
இப் பாதிப்புக்களை பெரும்பாலும் குணப்படுத்த அல்லது திருத்த முடியும் என்பதனை மறவாதீர்கள். நாடு முழுவதிலும் இப்பொழுது இலவச கண் கிசிச்சை நிலையங்களில் உயர்ந்த தேர்ச்சி பெற்ற கண் வைத்திய நிபுணர்களைக் கொண்ட கோஷ்டியினர், உங்கள் பிள்ளையின் குறையை நீக்க உழைக்கின்றுர்கள். இப்பொழுதே செயற்படுங்கள். காலம் மிகவும் முக்கியமானது.

Grant K&E

பாலர்களின் கண்ணை பாதுகாக்கவும்

கொழும்பு மேற்கு ரோட்டரிக் கழகத்தின் – தேசிய அபிவிருத்தி சமூக சேவைத் திட்டம் 1978/79 கண்பார்வைப் பாதிபபுக்கான தேசிய சங்கத்துடன் இணைந்து மேற்கொள்ளப்படுவது. கௌரவ சுகாதார அமைச்சரால் அங்கிகரிக்கப்பட்டது.

பாட்டா விளம்பரம் பாடா ஷூ கம்பனி லிமிட்டெட் ஆதரவிலானது.

## கூப்பனை இப்பொழுதே அனுப்புங்கள்

நிரப்பி தபாலட்டையொன்றில் ஒட்டி, அல்லது பின்வரும் விபரங்களை தபாலட்டையிற் குறிப்பிட்டு கொழும்பு மேற்கு ரோட்டரிக் கழகம், த. பெ. எண். 200, கொழும்பு என்று விலாசமிட்டு அனுப்புங்கள்.

பிள்ளையின் பெயர் ______
______ வயது ______
விலாசம் ______
அண்மையிலுள்ள உப தபால் காரியாலயம் ______
கண் பார்வைப் பாதிப்புப் பற்றி சுருக்கமாகக் கூறவும், ______

சர்வதேச குழந்தைகள் ஆண்டு 1979.

## மக்கள் கருத்து

### இனஐக்கியத்துக்கு வெறும் உபதேசமா?

புத்தாண்டில் நாடு சுபீட்சம் அடையவேண்டுமென்றும் ஐக்கியம் நிலவவேண்டுமென்றும் அரசியல் தலைவர்கள் சிலரின் அறிக்கைகள் பத்திரிகைகளில் வெளிவந்திருந்தன. பல பத்திரிகைகள் இதே கருத்தை வெளியிட்டிருந்தன. வடபகுதியில் நடைபெற்ற வன்செயல்களை சுட்டிக்காட்டி, தமிழர் விடுதலைக் கூட்டணியினர் இதை இன்னும் கண்டிக்கவில்லையென்றும் ஒரு பத்திரிகையில் வெளியான அரசியல் விமரிசனத்தில் குற்றம் கூறப்பட்டிருந்தது.

வன்செயல்களை நிறுத்த வேண்டியது நாட்டின் அமைதியையும் முன்னேற்றத்தையும் விரும்பும் அனைவரது கடமையாகும். ஆனால் இன ஐக்கியம்பற்றிப் பத்திரிகைகள் தலையங்கங்களையும் கட்டுரைகளையும் எழுதி உபதேசம் செய்தால்மட்டும்போதுமா? சிங்கள மக்கள் மத்தியில் தமிழ் மக்களைப்பற்றியுள்ள அவநம்பிக்கையையும் தமிழ் மக்கள் மத்தியில் சிங்கள மக்கள்மத்தியிலுள்ள சந்தேகத்தையும் நீக்குவதற்குப் பத்திரிகைகள் முயலவேண்டாமா?

சமீபத்தில் யாழ்ப்பாண அரசாங்க அதிபரின் தாயார் யாழ்ப்பாணத்தில் காலமானார். அரசாங்க அதிபர் திரு. லயனல் பெர்ணாண்டோ தாயாரின் சடலத்தைத் தமது சொந்த ஊருக்கு எடுத்துச் செல்லாமல் யாழ்ப்பாண மண்ணுக்கே அவரைச் சொந்தமாக்க பரந்தமனப்பான்மையுடன் தீர்மானித்தார். அரசாங்க அதிபரின் நல்ல பண்பையும், அமைதியை நிலைநாட்டவேண்டுமென்ற மனப்பான்மையையும் உணர்ந்த யாழ்ப்பாணத்துத் தமிழ் மக்கள், தாங்கள் இதற்குமுன் பார்த்தறியாத அரசாங்க அதிபரின் தாயாரான ஒரு சிங்களப் பெண்ணுக்குச் செலுத்திய இறுதி அஞ்சலி சமீபகாலத்தில் யாரும் கண்டிராத காட்சி. சாதாரண பொதுமக்கள் ஆயிரக்கணக்கில் கலந்துகொண்டனர். பிரேதப் பெட்டியைத் தோளிலேயே சுமந்து சென்றனர்.

இந்த நிகழ்ச்சிகள் பற்றிய செய்தியும் புகைப்படங்களும் இந்த நாட்டிலுள்ள தமிழ்ப் பத்திரிகைகளில்தான் வெளிவந்திருக்கின்றன. சிங்களப் பத்திரிகைகளிலோ ஆங்கிலப் பத்திரிகைகளிலோ ஒரு புகைப்படமோ, இதுபற்றிய செய்தியோ வெளிவந்ததாகத் தெரியவில்லை. இன ஐக்கியத்துக்கு இந்தப் பத்திரிகைகள் தான் உபதேசம் செய்கின்றன!

எஸ். கோவிந்தன்.
யாழ்ப்பாணம்.

### "மற்றும் வீதிகளிலும் நடைபாதை அமைக்க வேண்டும்"

யாழ்ப்பாணத்தில் பலஇடங்களில் உரியநேரத்தில் குப்பை, கூளங்கள் அகற்றப்படுவதில்லை இதனால் அக்குப்பைகள் பல தினங்களாக ஒரே இடத்தில் கிடந்து அழுகி அப்பகுதியில் துர்நாற்றம் ஏற்படுகிறது. இது அப்பகுதியில் வாழும் மக்களின் சுகாதாரத்தையே பாதிக்கக்கூடியதாகும்.

கச்சேரியிலிருந்து ஒருவர் யாழ்ப்பாணத்திற்கு பஸ்ஸில் வரும் போது எத்தனையோ இடங்களில் வீதியின் இரு கரைகளிலும் குப்பை கூளங்கள் அகற்றப்படாமல் இருப்பதைக்காணமுடியும்.

வீதியோரங்களில் புல்பூண்டுகள் பெரிதாக வளர்ந்திருக்கிறது. காகிதங்கள், உதிர்ந்த இலைகள் குழைகள் அவற்றுள் சிக்கிச் சிதறிக்கிடக்கின்றன. மக்கள் பிரதான வீதியில் தார்றோட்டிலேயே நடந்துசெல்ல வேண்டியிருக்கிறது. இது விபத்துகளுக்கு வழிகோலுவதாகும்.

ஆஸ்பத்திரி வீதி, மகாத்மா காந்தி வீதிகளில் அமைக்கப்பட்டுள்ள நடைபாதைகளைப் போல் மற்றும் பகுதிகளிலும் நடைபாதைகளை அமைத்தால் குப்பைசேரவேண்டிய நிலை ஏற்படாது.

ஸ்ரான்லி வீதி, ஆஸ்பத்திரி வீதி, மரக்கறி மார்க்கட்பகுதி ஆகிய இடங்களிலும் குப்பைகள் உரியநேரத்திற்கு அகற்றப்படாமலிருப்பதால் துர்நாற்றம் வீசுகிறது.

இதனை யாழ். மாநகரசபை ஆணையாளர் உடன்கவனத்திற்கு எடுக்கவேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

வி. சந்திரன்.
வண்ணார்பண்ணை.

### 'ஆரியகுளத்தைச் சுற்றி பெரும்அணைகட்டவேண்டும்'

தங்கள் நிர்வாகத்தின் திட்டங்கள், செயற்திறன்கள் யாவையும் விரிவாகவும் சுருக்கமாகவும், யதார்த்தபூர்வமாகவும் கூறியுள்ளதை 'ஈழநாடு' பத்திரிகையில் படித்து அகமிக மகிழ்ந்தோம் - பாராட்டுகிறோம்-வாழ்த்துகிறோம். ஊழியர்களின் அசட்டை நிலையை தெட்டத் தெளிவாக்கியுள்ளீர்கள். வரியிறுப்பாளரிடமிருந்து சீர்திருத்தங்கள், தேவையைக் கேட்டுள்ளீர்கள்-மகிழ்ச்சி. எமது குறைகள் நீண்டகாலமாகத் தீர்க்கப்படாத ஒன்று.

1. ஆரியகுளம் கிழக்குப் பகுதி வருடாந்தம் வெள்ள விழா எடுப்பதில் முன்னிடத்திலுள்ளது. வருடாந்த வெள்ள விழா - குடிபெயருப் நிலை- தற்போது குளம் நிறையும் வேளைகளிலெல்லாம் நிகழ்கிறது. இந்நிலை நீங்கவேண்டும் குளம் நிரவுவதால் நன்மையல்ல. காரணம்: நீர்த்தேக்கம் வேண்டும், குளத்தைச் சுற்றி உயர அணைகட்டிவிட்டால் அடுத்துள்ள காணிக்காரர் - குடியிருப்பாளர் தங்கள் தங்கள் வளவுகளையும் உயர்த்திக்கொள்வார்கள்; சிறந்த வழி காலாகாலமாகவுள்ள

(5-ம் பக்கம் பார்க்க)

## "தனிநாட்டுப் போராட்டத்தை

# அரசுநசுக்க முற்பட்டால்

## அதற்கு எதிராகப் போராடுவோம்"

### பருத்தித்துறையில் ஆனந்த வக்கும்பற உரை

(பருத்தித்துறை)

வடபகுதியில் நடைபெற்ற வன்முறைச் சம்பவங்களை நாம் ஆதரிக்காத போதிலும் இதனைச்சாட்டாக வைத்துப் பொலிசாரும் இராணுவத்தினரும் நடத்தி வரும் தாக்குதல்களை வன்மையாகக் கண்டிக்கின்றோம்"

இவ்வாறு பருத்தித்துறையில் நடைபெற்ற நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவின் இலங்கைப்பிரிவான புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்தின் பொதுக்கூட்டத்திகலந்துகொண்டு உரையாற்றிய திரு நந்த விக்கிரமசிங்க கூறினார்

திரு தேவராசா தலைமையில் நடந்த இக்கூட்டத்தில் அவர் தொடர்ந்து உரையாற்றுகையில் கூறியதாவது

நல்லூர் வங்கிக் கொள்ளையின் பின்பு யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற சம்பவங்கள் பொலிஸ் இராணுவத்தினரின் செயல்களை அம்பலப்படுத்தி உள்ளது மக்களைத் தாக்கவும் கடைகளைப் பொடியாக்கவும் பொலிசாருக்கு அதிகாரம் வழங்கியது யார்? இந்தப் பொலிஸ்காரர்களையிட்டு அரசாங்கம் சின்ன விரலைத் தன்னும் ஆட்டப்போவதில்லை."

புரட்சிக் கம்யூனிஸ்ட்கழக அரசியற் குழு உறுப்பினர் திரு. ஆனந்த வக்கும்பற கூறியதாவது "தமிழர் விடுதலைக்கூட்டணியின் தனிநாட்டுக் கோரிக்கையை நாம் ஆதரிக்காவிடினும் தமிழ் மக்கள் தம் சுயநிர்ணய உரிமையைத் தீர்மானித்து தனிநாட்டுப் போராட்டத்தில் இறங்கும் பட்சத்தில் கொழும்பில் இருக்கக் கூடிய சிங்கள அரசாங்கம் அப்போராட்டத்தை நசுக்க பொலிஸ் இராணுவத்தினரைப் பயன்படுத்தினால் அதற்கெதிராகத் தென்பகுதியில் புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம் அரசுக்கு எதிராகவும் பொலிசாருக்கு எதிராகவும் போராடும்.

"தமிழ் மாணவர்களுக்கு புள்ளி வழங்குவதில் சலுகை காட்டப்படுகின்றது என அமைச்சர் சிறில் மத்யூ செய்து வரும் பிரச்சாரம் பித்தலாட்டமானது வட பகுதியில் இன்று எழுந்துள்ள நிலைமைகளை எந்தப் புரட்சிக் கட்சியும் தட்டிக்கழித்து விடமுடியாது தனிநபர் தாக்குதலைச் சாட்டாக வைத்து ஒடுக்கப்படும் தமிழ் மக்களையும் தொழிலாள வர்க்கப் புரட்சியாளர்களையும் அரசு நசுக்க முனைகின்றது எனவே தமிழ்மக்கள் தனிநபர்தாக்குதலை பகிஷ்கரித்து சோஷலிச வேலைத்திட்டத்தின் கீழ் அணிதிரள வேண்டும்".

இப்பொதுக்கூட்டத்திற்கு முன்பு உலகட்புரட்சியின் வரலாற்றைச் சித்தரிக்கும் கண்காட்சி ஒன்றும் நடத்தப்பட்டது. (௬)

## இன்றைய இராசிப்பலன்

மார்கழி மாதம் 18-ந் திகதி
செவ்வாய்க்கிழமை
(2-1-79)

**மேடம்:-** உங்கள் வீட்டிலேயே பூசல்கள் தோன்றி மறையும், சகோதரவழியால் சஞ்சலத்திற்கிடமுண்டு, எதற்கும் முன்யோசனை விரும்பத்தக்கது.

**இடபம்:-** தாய்வழிமூலம் தனவரவிற்கிடமுண்டு, வாகனச் சாரதிகள் பயனடைவர். பயன்தரும் பிரயாணமொன்றும் மேற்கொள்ளப்படலாம்.

**மிதுனம்:-** குடும்பப்பிரச்சினைகளில் சுமுகமான நிலைதென்படும், சுற்றுடலிலும் செல்வாக்குப் பெருகும், மக்களால் மகிழ்ச்சியுமுண்டு.

**கடகம்:-** அன்னியர்கள் மத்தியில் அதிகம் பழகவேண்டாம், சிலருக்கு உடல்நலமும் பாதிக்கப்படலாம், வழக்கு விவகாரங்களில் மாட்டிக்கொள்ளாதிருக்கவும்.

**சிங்கம்:-** தாம்பத்திய வாழ்க்கையில் அதிகஒற்றுமைக்கிடமுண்டு, காதலர்களாயின் இன்பமான சூழ்நிலை உருவாகும், தொழில் துறையிலும் வெற்றியுண்டு.

**கன்னி:-** விபத்துக்குமிடமேற்படும், எதிலும் நிதானத்துடன் நடந்து கொள்ளவும், சிலர் கடன்படவும் நேரிடும், பொறுமையைப்பேணவும்.

**துலாம்:-** இரக்க சிந்தை மேலிடும், பொதுப்பணிகளில் ஆர்வம் காட்டுவீர்கள், பெரிய இடத்துத் தொடர்பு ஏற்படுவதற்கும் இடமுண்டு, கண்ணியமான தினம்.

**விருச்சிகம்-** தொழில் புரியுமிடத்தில் சிறப்புக் கிடைக்கும், டாக்டர்கள் போற்றப்படுவார்கள், தூரத்துச்செய்தியொன்று உற்சாகத்தை ஏற்படுத்தும்.

**தனுசு:-** வரவிலும்திருப்தி ஏற்படும், நீண்டநாள் எதிர்பார்த்த நிதி வசதி இன்று கிடைக்கலாம், வாழ்க்கை இன்று திருப்திகரமாகவிருக்கும்.

**மகரம்:-** சிந்தனைகளின் தாக்குதல் உங்கள் உடல் நிலையைப் பாதிக்கும், மனதில் விரக்திநிலை தென்படும், திடீர் முடிவுகளைத் தவிர்த்துக்கொள்ளவும்.

**கும்பம்:-** இன்னலின் பின்னலால் இதயபாரமேற்படும், வேண்டாதவீண்வாதங்களால் குறைகேட்கநேரிடும், நாவடக்கம் வேண்டும்.

**மீனம்:-** வசிகரப்பேச்சினால் மற்றவர்களைச் சொக்க வைப்பீர்கள், சிலர் வாழ்க்கையில் திரவிய லாபத்துக்குமிடமுண்டு. பணம் பத்தும் செய்யும்.

சோதிடக்கலாநிதி
திருமலை க. வேலுப்பிள்ளை

## கல்வி அதிகாரியை அதிபர் பயமுறுத்தினாராம்!

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் கல்வி மாவட்டத்தைச் சேர்ந்த பாடசாலை ஒன்றில் நடைபெற்றதாகக் கூறப்படும் ஊழல்கள் பற்றி விசாரணை செய்யச்சென்ற கல்வித்திணைக்கள அதிகாரிஒருவர் அப்பாடசாலை அதிபரால் பயமுறுத்தப்பட்டாராம்.

இப் பயமுறுத்தலைத் தொடர்ந்து பொலிசாருடன் அந்த அதிகாரி மீண்டும் அங்கு சென்றபோது, அதிபர் தலைமறைவாகிவிட்டதாகக் கூறப்படுகிறது.

அப்பாடசாலை அதிபர் உடனடியாக கிளிநொச்சிப் பகுதி பாடசாலைக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

இது தொடர்பான விசாரணை நடைபெற்றுவருகிறது

(புலோலி-நெல். நி)

## ம. கி. விவகாரம்

செய்ரோ, ஜன 1

மத்திய கிழக்கு விவகாரத்தில் இஸ்ரேல் தற்போது கொண்டுள்ள நிலைப்பாடு வரவேற்கத் தக்கதென்று எகிப்திய அரசாங்க அதிகாரி ஒருவர் கருத்து வெளியிட்டுள்ளார்.

"புளோறெஸென்ற்" குழாய்கள் வெண்மை (இயற்கை ஒளி)

விசேட அறிமுக விலை 17/- மட்டுமே.

இக் குழாய்கள் "டேலைற்" குழாய்களை விட 58% அதிக துல்லிய பிரகாசத்தை அளிப்பதுடன் அதிக ஒளியையும் குறைந்த வெப்பத்தையும் வெளிப்படுத்துகின்றன. சதுர அடிக்குத் தேவைப்படுவதிலும் குறைந்த குழாய்களை உபயோகித்து மின்பாவனையை மீதப்படுத்த முடிகிறது. தொழிற்சாலைகள், காரியாலயங்கள், வியாபார ஸ்தாபனங்கள் மற்றும் வீடுகளுக்கும் ஒளியேற்ற உன்னதமானவை.

விற்பனையாளர்களுக்கு கழிவு உண்டு

இன்றே தொடர்பு கொள்ளுங்கள்.

ரி. ஏ. ஜே. நூர்பாய் அன் கோ., லிமிட்.

அவுஸ்திரேலியா பில்டிங்,
யோர்க் வீதி,
கொழும்பு-1.

164, நாலாம் குறுக்குத்தெரு.
புறக்கோட்டை
தொலைபேசி: 27245-27236.



# புத்தாண்டில் மலர்ந்தது

# சீன--யு. எஸ். ராஜிய உறவு



## கார்ட்டர்-பெங் பரஸ்பர மகிழ்ச்சி

வாஷிங்டன், ஜன. 1 அமெரிக்காவுக்கும், சீனவுக்கும் இடையில் இப்புத்தாண்டு முதல் ராஜ்ய உறவு ஏற்பட்டுள்ளது.

இது உலக சமாதானத்திற்கு வழிகோலும் எனத் தாம் நம்புவதாக அமெரிக்க ஜனதிபதி திரு. ஜிம்மி கார்ட்டர் இது தொடர்பாக சீனப் பிரதமர் திரு. ஹுவா-ஹுவா பெங்கிற்கு அனுப்பிவைத்துள்ள செய்தியில் தெரிவித்திருக்கிறர்.

''தவறுன எண்ணங்களும் பகைமையும் புத்தாண்டுடன் மறையட்டும்'' என்றும் அவர் தெரிவித்திருக்கிறர்.

### சீனப்பிரதமர்

சீனப்பிரதமர் தமது செய்தியில் புதியராஜ்ய உறவுகுறித்து மகிழ்ச்சி தெரிவித்துள்ளார்.

கடந்தகால சபவங்கள் குறித்துத் தமது செய்தியில் அவர் எதுவும்குறிப்பிடவில்லை. [உ]

## துண்டிப்பு!

வாஷிங்டன், ஜன. 1 அமெரிக்காவுக்கும் தாய்வானுக்குமிடையிலான ராஜியத் தொடர்புகள் துண்டிக்கப்பட்டுள்ளன. (உ)

## ராஜினமா

தெஹ்ரான், ஜன. 1 கிளர்ச்சிகளைத் தடுப்பதற்கு மன்னர் ஷா தவறிவிட்டார் என்று கூறி ஈரானின் இரு சிரேஷ்ட இராணுவ அதிகாரிகள் ராஜினமாச் செய்துள்ளனர். [உ]

## ''அச்சமற்ற-நேசம் நிறைந்த சமுதாயம் உருவாகட்டும்''

### ஜனதிபதி ரெட்டி ஆவல்

புதுடில்லி, ஜன. 1 ''அச்சமற்றதும், நேசம் நிறைந்ததுமான புதிய சமுதாயம் உருவாகவேண்டும்'' என்று பாரத ஜனதிபதி திரு. என் சஞ்சீவரெட்டி சர்வதேச குழந்தைகள் ஆண்டையொட்டி விடுத்துள்ள செய்தியில் வலியுறுத்தியிருக்கிறர்

இச்செய்தியில் ஜனதிபதி மேலும் கூறியிருப்பதாவது:

''பரஸ்பர சகிப்புத்தன்மை, மனிதனின் ஒற்றுமை என்பன குழந்தைகளுக்குப் போதிக்கப்பட வேண்டியது அவசியமாகும்.

''இப்போதனைகள் பயனளிக்க நீண்டகாலம் பிடிக்கலாம். ஆனல் முயற்சியில் தளர்ச்சிகூடாது.'' (உ)

## ''ஈரானிய ஆஸ்பத்திரிகளில் கலவரம்: 600 பேர் பலி; பலர் காயம்

தெஹ்ரான், ஜன. 1 ஈரானில் உள்ள மூன்று ஆஸ்பத்திரிகளில் துருப்புகளுக்கும், அரசுக்கும், எதிரான ஆர்ப்பாட்டங்களுக்கிடையே மூண்ட கலவரத்தில் 600க்கும்மேற்பட்டோர் பலியாகினர், பலர் காயமடைந்தனர். இதேவேளை, மன்னர் ஷாவுக்கு எதிரான ஆர்ப்பாட்டங்கள் பரவலாக நடைபெறுவதாக அறிவிக்கப்படுகிறது. அமெரிக்க எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களும் நடைபெற்றதாகத் தெரிவிக்கப்பட்டது.

## ''ஒளிமயமான வாழ்வுக்கு அடிப்படை குழந்தைகளே''

### பிரதமர் தேசாய் செய்தி

புதுடில்லி, ஜன. 1 ''குழந்தைகளை அடிப்படையாக வைத்தே மனித குலம் ஒளிமயமான எதிர்காலத்தை அமைக்க முடியும்'' என்று சர்வதேச குழந்தைகள் ஆண்டையொட்டிவிடுத்துள்ள செய்தியில் பாரதப் பிரதமர் திரு. மொரார்ஜி தேசாய் கூறியிருக்கிறர்.

பிரதமர் தமது செய்தியில் மேலும் கூறியுள்ளதாவது: ''நீதிமிக்கதாக எதிர்காலம் அமையவேண்டும். ஐக்கிய நாடுகள் குழந்தைகள் நல அமைப்புக்குழுவுக்கு முதன் முதலாக நிதிவழங்கியுள்ள நாடு பாரதமே.

''குழந்தைகள்வளர்ச்சிக்கு அரசு பல திட்டங்களைச் செயற்படுத்திவருகிறது''. (உ)

### மாணவர் பேரணி

புதுடில்லி, ஜன. 1 சர்வதேச குழந்தைகள் ஆண்டையொட்டி புதுடில்லியில் 30,000 மாணவர்கள் கொண்ட பேரணி ஒன்று நடத்தப்பட்டது.

இப்பேரணியை ஜனதிபதி திரு என். சஞ்சீவரெட்டி ஆரம்பித்துவைத்தார். பல மாநிலங்களிலும் இதுபோன்ற மாணவர் பேரணிகள் நடைபெற்றன. (உ)

## ஜனநாயகம் காக்க மக்கள் குழுக்கள்

### ஜெ. பி. புத்தாண்டுச் செய்தி

புதுடில்லி, ஜன 1 ''ஜனநாயகத்தை பேணிப் பாதுகாக்கும் வகையில் நாடு முழுவதும் மக்கள் குழுக்கள் அமைக்கப்படவேண்டும்'' என்று ஜெயபபிரகாஷ் நாராயண் புததாண்டை முன்னிட்டு வெளியிட்டுள்ளசெய்தியில் கூறியிருக்கிறர்.

திரு நாராயண் தமது செய்தியில் மேலும் கூறியிருப்பதாவது 'சிலகாலத்திற்கு முன் நாடு சர்வாதிகாரத்தின் விளிம்பிற்கே சென்றிருந்தது. பொதுத்தேர்தல் மூலம் மக்கள் சர்வாதிகாரத்தை உதறித்தள்ளிவிட்டனர்.

''ஜனநாயகம் பாதுகாக்கப்பட நாடுமுழுவதும் மக்கள் குழுக்கள் உருவாக வேண்டும் இதனை அரசாங்கம்தான் செய்யவேண்டும் என்பதில்லை சமூக நலசேவாஸ்தாபனங்களும் செய்யலாம்''. [உ]

## புதுடில்லியில் 7-வது சர்வதேச திரைப்பட விழா

புதுடில்லி, ஜன. 1 ஏழாவது சர்வதேச திரைப்படவிழா எதிர்வரும் புதன்கிழமை புதுடில்லியில் ஆரம்பமாகவிருக்கிறது

விழாவை ஜனதிபதி திரு என் சஞ்சீவரெட்டி ஆரம்பித்து வைப்பார்.

வெளிநாட்டுப் பிரதிநிதிகளாக 100 பேர் கலந்துகொள்வர் விழாவில் 400க்கும் மேற்பட்ட பிரதிநிதிகள் பங்குபெறுவர்.

24 போட்டிப் படங்களும் 98 தகவல் பிரிவுப்படங்களும் விழாவில் திரையிடப்படும் கடந்த ஆண்டின் சிறந்த பத்து மொழிபபடங்களும் திரையிடப்படும். (உ)

Agridol E-806

விவசாயிகளே!

உங்கள் பயிர்களை நாசம் செய்யும் பூச்சி, புழுக்களை அடியோடு அழிக்கவேண்டுமா?

இதோ உங்களுக்கு ஓர் நற்செய்தி!

எல்லா பூச்சி, புழுக்களையும் அறவே ஒழித்துக்கட்ட வல்லது சக்தி வாய்ந்த சர்வ கிருமி நாசினி.

அக்றிடோல்ஈ-806




கொம்பிளசால் (திரவ உரத்தை) இலங்கையில் அறிமுகப்படுத்திய அக்றிகோலாஸ் கொம்பனி இப்பொழுது மற்றும் ஓர் பூச்சி, புழுக்களை நன்கு கட்டுப்படுத்தும் சக்திவாய்ந்த சர்வ பூச்சி நாசினி.

அக்றிடோல் ஈ-806 ஐ

அறிமுகப்படுத்துகிறுர்கள்.

நெல், புகையிலை, உருளைக்கிழங்கு, மிளகாய், வெங்காயம், கோவா, முந்திரிகை மற்றும் எல்லா மரக்கறிப்பயிர்களை நாசம் செய்யும் எல்லாப் பூச்சி, புழுக்களையும் அறவே ஒழித்துக்கட்டவல்லது.

அக்றிடோல் ஈ-806.

நம்பிக்கையோடு தெளிக்க உகந்த அக்றிடோல் ஈ-806, 1000 சீசீ. 500 சீசீ 250 சீசீ ஆகிய அலுமினிய அடைப்புகளில் கிடைக்கின்றது முதல் 5000 டின்கள் விசேஷ அறிமுக விலையில் விற்பனையாகின்றன.

அக்றிடோல் ஈ-806

இலங்கையில் பரீட்சித்தபோது நல்ல பலன் உடையது என நிரூபிக்கப்பட்டது.

மேலும் விபரம் அறிய:

அக்றிகோலாஸ்

173, கெய்ஸர் வீதி, கொழும்பு-11

தலைமை அலுவலகம்:

அக்றிகோலாஸ்,

ஊரிக்காடு,

வல்வெட்டித்துறை. 1204

**Rio** (Jaffna) Daily 10-30, 4-45, 7-00, 9-30.
Phone: 7607
RICHARD BURTON in
5th OFFENSIVE
Color (War Film) Scope

**நாகம்ஸ்** (சுன்னாகம்)
தினசரி 6-45, 10-00
சனி, ஞாயிறு 2-45
ஜெமினி - பத்மினி
அன்னைவேளாங்கண்ணி
(கலர்)

## பதவி உயர்வு

[புலோலி]

முல்லைத்தீவு உதவிமதுவரிப் பரிசோதகராகக் கடமையாற்றிய திரு. இம்மனுவல் ஜெயசிங்கம் இம்மாதம் முதல் வவனித்தா மதுவரி ஸ்தானப் பொறுப்பதிகாரியாக நியமிக்கப்பட்டுள்ளார். [அ]

**வெஸ்லி** (மானிப்பாய்)
தினசரி 6-30, 9-30
சிவகுமார் - சுஜாதா
அன்னக்கிளி

**வெலிங்டன்** [யாழ்ப்பாணம்] தினசரி 4 காட்சிகள்
ஜெமினி - சுஜாதா - கமலஹாசன் - சுமித்ரா
லலிதா

**லிடோ** [யாழ்.நகர்] போன்: 7608 தினசரி 4 காட்சிகள்
பெண் தெய்வம்

**மனோகரா** [யாழ்நகர்] தினசரி 4 காட்சிகள்
முத்துராமன்-ஜெயலலிதா-ஸ்ரீகாந்த் சுகுமாரி நடித்த
கணவன் மனைவி

**ராஜா** (யாழ்நகர்) தினசரி 4 காட்சிகள்
எம். ஜி. ஆர். - ஜெயலலிதா நடித்த
ராமன் தேடிய சீதை
(கலர் - புதிய பிரதி)

**ஸ்ரீதர்** (யாழ்நகர்) தினசரி 4 காட்சிகள்
கமலஹாசன் - சுஜாதா மற்றும் பலர் நடித்த
உயர்ந்தவர்கள்

வெற்றிமுழக்கமிடும் 6வது வெற்றி வாரம்!
**சாந்தி** (யாழ்நகர்) போன்: 7648
தினசரி 4 காட்சிகள்
10-30, 4-30, 7-00, 9-30
இன்னும் சில தினங்கள் மட்டும் — Last Few Days
LEE VAN CLEEF... LO LIEH...
BLOOD MONEY (Scope - Color)

**REGAL** (Jaffna) NOW SHOWING
Daily at, 4-30, 7-00 & 9-30 p m.
Gamini Fonseke — Mary Tamm
in
RAMPAGE
(Jungle Adventure வனந்தரசித்திரச் செயல்கள்) (Color)

**ராணி** [யாழ். நகர்] தினசரி 4 காட்சிகள் சிலதினங்கள் மட்டும்
எம். ஜி. ஆர். - ராதா சலூஜா நடித்த
இதயக்கனி (புதியபிரதி)

**வின்ஸர்** (யாழ்ப்பாணம்) போன்: 466
தினசரி 5 காட்சிகள்
கலைமாமணி சிவாஜிகணேசன், மாலினி பொன்சேகா
பைலட் பிரேம்நாத்
(ஈஸ்ட்மன் கலர்)
குறிப்பு;
தியேட்டருக்கு வெளியே வேறு தியேட்டர்களில் பெற்ற டிக்கெட்டுகள் விற்கப்படுவதால் அவற்றை வாங்கி ரசிகர்கள் ஏமாறவேண்டாமெனக் கேட்டுக்கொள்கிறோம்.

## 'மேல் வகுப்புகளை தொடர்ந்து நடத்துக'

(யாழ்ப்பாணம்)

ஆரம்பதரம் தொடக்கம்மேல் வகுப்புகளும் இப்பாடசாலையில் தொடர்ந்து நடைபெறுவதற்கு வேண்டிய நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு கோப்பாய் சரவணபவானந்த வித்தியாலய பெற்றார் - ஆசிரியர் சங்கம் வடமாநில வித்தியாதிபதியைக் கேட்டுள்ளது.

இவ்விடயம் தொடர்பாக வித்தியாதிபதியையும் கோப்பாய் எம். பி. யையும் சங்கம் பேட்டிகாண்பதென முடிவு செய்தது. (உ)

## தாபரிப்பு வழக்கில் சமாதானம்

[நெல்லியடி]

''கடவுளுக்குப்பூஜைசெய்வதுடன், மனித சமுதாயத்தினரை ஆத்மீகத் துறையில் அழைத்துச் செல்பவர்கள் பூசகர்கள். மனித சமுதாயத்தில் உதாரண புருஷர்களாக விளங்கவேண்டியவர்கள் நீங்களே. உலகிலுள்ள பெரிய தாபனங்களில் உயர்ந்த இடமும் மரியாதையும் ஆலயங்களுக்கே உண்டு. அங்ஙனமாக உயர்ந்த ஸ்தானத்தை வகித்து வரும் நீங்கள் தாபரிப்புவழக்கு போன்றவற்றிற்கு நீதிமன்றங்களை நாடி வருவது விரும்பத்தகாதது''.

மேற்கண்டவாறு பருத்தித்துறை நீதிமன்றத்தில்எடுத்துக் கொள்ளப்பட்ட தாபரிப்பு வழக்கொன்றில், வழக்காளியையும், பிரதிவாதியையும் பார்த்து நீதவான் திரு. கே. ஞானச்சந்திரன் கூறினார்.

நீதவான் இவ் விளம்தம்பதிகளைச் சமாதானமாகச்சென்று வாழுமாறு ஆலோசனை நல்கினார். நீதவானின் ஆலோசனையை ஏற்றுக்கொண்டஇத் தம்பதிகள் சமாதானமாக வாழ்வதாகக் கூறிச்சென்றார்கள். [அ]

## சங்காபிஷேகம்

(யாழ்ப்பாணம்)

சுன்னாகம் ஸ்ரீ சந்திரசேகரப் பிள்ளையாருக்கு எதிர்வரும் 4ம் திகதி விநாயகசஷ்டி விரதத்தை முன்னிட்டு விசேஷ அஷ்டோத்தரசதசங்காபிஷேகம், நியாசபூர்வ பஞ்சமுகார்ச்சனை என்பன நடைபெறும். சுவாமி வீதியுலந வருவார். நியாய சிரோன்மணி கி சுப்பிரமணிய சாஸ்திரிகள் 'விரத மகிமை' பற்றி உரைநிகழ்த்துவார். [அ]

## ஆரிய...

[3ம் பக்கத் தொடர்ச்சி]

பள்ளத்தாரை மேட்டார்களாக்கிவிடலாம்.

2. அதே பகுதியில் 83 ம் இலக்க ஸ்ரான்லி வீதி ஒழுங்கை எந்நேரமும் வெள்ளம் தாழ்ந்த நிலையில் உள்ள இவ் ஒழுங்கை சிறு மழை பெய்தாற்கூட நீர் தேங்கி நிற்கின்றது. பாத அணிகளை தலையில் சுமந்தும் மாணவர்கள் ஒரு கையில் பாத அணியுடன், மறு கையில் புத்தகங்களுடனும், குழிகளில் தட்டுத்தடுமாறி ஸ்ரான்லி வீதியில் ஏறி அணிந்து செல்லும் காட்சி மிகவும் பரிதாபகரமானது. இக்கஷ்டம் தீர ஒழுங்கையைக் கல் போட்டு உயர்த்தி வெள்ளம் தேங்கி நிற்காது செய்வதன் மூலம் இப்பகுதி வரியிறுப்பாளரின் நீண்டகாலப் பெருங்குறையை நிவர்த்தியாக்க முடியும்.

3. வெள்ளக்காடாகி குடிபெயர்ந்தவர்கள் மீண்டும் குடிவந்துள்ள இப்பகுதி, சுகாதாரப்பகுதியினரால் தொற்று நோய்க் கிருமிகள் உண்டாகாதபடி மருந்து தெளிக்காது புறக்கணிக்கப்பட்டுள்ளது.

செல்வி
பி. செந்தில்நாயகம்.
யாழ்ப்பாணம்.

## உயர்கல்வி கற்க

# தந்தை தடை; இளம்பெண் தற்கொலை

(நெல்லியடி)

உயர்கல்விகற்க தந்தை தடைபோட்டதைப் பொறுக்க முடியாத பருவமங்கை ஒருவர் கழுத்தில் சுருக்கிட்டுத் தற்கொலைசெய்துகொண்டார்.

மேற்படிசம்பவம் கரவெட்டி வடக்கிலுள்ள வதிரி என்னும் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

26வயதுடைய தம்பையா புவனேஸ்வரியே இவ்வாறு பரிதாபமாக இறந்தவராவார்

காலஞ்சென்ற புவனேஸ்வரி நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்தில், வசதிப்பணத்தில் ஆசிரியையாக கடமையாற்றியவரென மரணவிசாரணையின்பொழுது தெரிவிக்கப்பட்டது

காலஞ்சென்றவரின் மரண விசாரணை, வடமராட்சிப் பகுதி திடீர் மரணவிசாரணை அதிகாரி திரு எம் வீ. புவனேந்திரன் முன்னிலையில் நடைபெற்றது. பருத்தித்துறை பொலிஸ் நிலையத்தைச்சேர்ந்த திரு கே. தில்லைநாதன் சாட்சிகளை ஆஜர்செய்தார்.

தந்தையான சின்னையா தம்பையா மரண விசாரணையில் தெரிவித்ததாவது: காலஞ்சென்ற எனது மகள் புவனேஸ்வரி கடந்த மூன்று வருடங்களுக்கு முன்பு க. பொ த. உயர்தரப் பரீட்சையில் சித்தியடைந்தார். ஆனல் பல்கலைக் கழக அனுமதி கிடைக்கவில்லை இவர் நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்திலும், யாழ்ப்பாணத்திலுள்ள தனியார் கல்வி நிறுவனம் ஒன்றிலும் க. பொ. த. உயர்தரக் கல்வியைக் கற்றவராவார். இவருக்கு பல்கலைக் கழக அனுமதி கிடைக்காததை அடுத்து படிப்பை நிறுத்தினேம்.

சமீபகாலத்திற்கு முன்பாக தாம் கல்விகற்ற, அதே நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்தில் வசதிப்பணத்தில் ஆசிரியையாகக் கடமையாற்றினார். பாடசாலைக்கு நிரந்தர ஆசிரியர் நியமிக்கப்பட்டதை அடுத்து காலஞ்சென்றவரின் ஆசிரியைப் பதவியும் இல்லாமற்போயிற்று.

கடந்தசில நாட்களுக்கு முன்பாகத்தான் உயர்கல்வி கற்கவேண்டுமென காலஞ்சென்றவர் விரும்பியிருந்தார். கற்பதற்கான ஆரம்பமுயற்சிகளை மேற்கொண்டிருந்தார்.

காலஞ்சென்றவர் தமது நோக்கத்தையும், அதற்கு ஏற்படும் செலவுத் தொகையினையும் என்னிடம் எடுத்துச் சொல்லியிருந்தார். நான் அவரின் நோக்கம் சரியானதெனவும், பயனுடையதெனவும் ஏற்றுக்கொள்ளவில்லை. அவருக்கு எமது குடும்பநிலையை தெளிவாக எடுத்துச்சொன்னேன். ''நீங்கள் மூன்று பெண்பிள்ளைகள், நான் ஒரு பென்சனியர்; வேறுவருமானம் இல்லாதவன். உனது படிப்புக்கும் வடதுக்கும் தோதில்லை. உனக்கு கல்யாணம் செய்கின்ற வயதாயிற்று கல்யாணம் முடித்தவுடன் படிப்பும் நின்றுவிடும் படித்தபடிப்பு நிறைவேறுமல் பலனற்றுப் போய்விடும். அதனைவிட உனக்கு சீதனம் என்றும் பணம்தேவை'' என்று விபரமாக எல்லாவற்றையும் எடுத்துச் சொல்லியிருந்தேன்.

'நான்கூறியவார்த்தைகளைக் கேட்ட அவர் மனக்கவலையடைந்திருந்தார். சம்பவதினம் தனது உயர்கல்வி படிப்புக்கு தடைபோட்ட கவலையினல் சுருக்கிட்டு தற்கொலை செய்துகொண்டிருக்கலாம் எனக்கருதுகின்றேன்' என்ஞர்.

தாயார் த. அன்னமுத்து, இளைப்பாறிய தபாலதிபர் திரு. ரி. பொன்னையா, கரவெட்டி வடக்கு கிராமசேவகர் திரு ரி. மாணிக்கவாசகர், கரவெட்டி அரசினர் வைத்தியசாலை டாக்டர் திரு ஏ. நடராஜா ஆகியோரின் சாட்சியங்களை பதிவுசெய்துகொண்ட மரண விசாரணை அதிகாரி திரு எம். வீ. புவனேந்திரன் தற்கொலை எனத் தீர்ப்பளித்தார். (உ)

## இருவர் சித்தி

(புலோலி)

யாழ். தொழில் நுட்பக் கல்லூரியிலிருந்து கடந்த வருடம் பரீட்சைத் திணைக்களத்தினுல் நடாத்தப்பட்ட தொழில்கற்கைகளிலான தேசிய தராதரப் பத்திர கைத்தொழிற் தொடர்புகள் பயிற்சி நெறியில் தோற்றியவர்களில் இருவர் மாத்திரமே சித்தியடைந்துள்ளனர்.

செல்வன் பாக்கியராசா, செல்வி கமலாசனி ஆகிய இருவருமே இப்பயிற்சி நெறியில் சித்தியடைந்தவர்களாவர்.

## வீதிநிலை மோசம்

(அரியாலை)

யாழ்ப்பாணம் கச்சேரி- நல்லூர் வீதியையும் கனகரத்தினம் வீதியையும் இணைக்கும் ஆசீர்வாதப்பர் வீதி என்ற பெயரோடு இருக்கும் பாணன்குளம் வீதி மிகவும்மோசமான நிலைமையில் இருப்பதால் அவ் வீதியால் பிரயாணம் செய்யும் சகலரும் மிகவும் கஷ்டமடைகின்றனர் மழைவெள்ளம் வீதியின் மேலால் ஓடுவதால் இவ் வீதி மிகவும் மோசமாகப் பழுதடைந்துள்ளது. (அ)

## நெல்லியடியில் இளைஞர் பஜனை

[உடுப்பிட்டி]

நெல்லியடி இந்து இளைஞர், மன்றத்தினர் தொடர்ந்து பத்துநாட்களுக்கு திருவெம்பாவை பஜனை ஊர்வலத்தை நடத்தத் தீர்மானித்துள்ளார்கள்.

நாளை 3ம் திகதி நெல்லியடி மத்திய மகாவித்தியாலயப் பிள்ளையார் கோவிலில் ஆரம்பமாகும் இப் பஜனை ஊர்வலம் கூட்டு வழிபாட்டுடன் முடிவடையும். [அ]

## சுழிபுரம் கிராமசபை சுறுசுறுப்பு

(சுழிபுரம்)

சுழிபுரம் கிராமசபை அலுவலக ஊழியர்கள் கடந்த சில தினங்களாக இரவு பகலாக வேலை செய்து வருகின்றனர் இதனுல் பொதுமக்கள் தமது கருமங்களைச் சுலபமாக நிறைவேற்றி வருகின்றனர் விசேஷ ஆணையாளர் திரு. சி. ஞானபாஸ்கரன் கந்தோர் வேலைகளை மேற்பார்வை செய்து வருகின்ஞர் சபையின் நடப்பாண்டு திட்டத்தைச் செயல்படுத்தும் முறைகள் பற்றியும் ஆராயப்பட்டு வருகின்றன.

சபையின் புதிய நடவடிக்கைகளான பொன்னுலை தண்ணீர் விநியோகம் புதிய சந்தைக் கட்டிட வேலைகள் வீதிகள் சீர்படுத்துதல் போன்ற திட்டங்கள் நடப்பாண்டில் செயல்படுத்தப்படவுள்ளன. (அ)

## அதிகலாபம்

[சுழிபுரம்]

சுழிபுரம் கிராம சபை பரிபாலனத்திலுள்ள சுழிபுரம் சத்தியக்காடு பல்லசுட்டி தொல்புரம் மத்தி பொன்னுலை ஆகிய இடங்களிலுள்ள நான்கு சந்தைகளும் முன்னைய ஆண்டுகளிலும் கடந்த 78-ம்ஆண்டு கூடிய ஏலம்போயுள்ளது

# அமிர் - இளைஞர் பேரவை சந்திப்பு

# 'தனிவழி' பற்றி காரசாரப் பேச்சு

## உள்ளூராட்சித் தேர்தல் பற்றியும் விவாதம்!

(யாழ்ப்பாணம்)

**தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைமைப் பீடத்துக்கும் தமிழ் இளைஞர் பேரவையின் தலைமைப் பீடத்துக்குமிடையில் ஏற்பட்டிருந்த கருத்துவேறுபாடுகளை நீக்குமுகமாக இருதலைமைப் பீடங்களுக்குமிடையே நேற்றுக் காலை தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைமை அலுவலகத்தில் நடந்த சமரசப் பேச்சுவார்த்தைகள் உச்சக்கட்டத்தில் பலத்த வாக்கு வாதத்தை ஏற்படுத்தியபோதிலும் பெருமளவில் இருபகுதியினருக்குமிடையில் நெருங்கிய நல்லுறவை ஏற்படுத்தியிருப்பதாக அறியப்படுகிறது.**

தமிழர் விடுதலைக்கூட்டணியின் தலைமைப்பீடத்துக்கும் இளைஞர்பேரவையினருக்கு மேற்பட்டுள்ள கருத்துவேறுபாடுகளை நீக்குமுகமாக இளைஞர்களின் அன்பையும் கூட்டணியின் ஆதரவையும் வெகுவாகப் பெற்றுள்ள யாழ். எம். பி. திரு வெ யோகேஸ்வரன் நேற்றுமுன்தினம் இரு தரப்பினரையும் தனித்தனியாகச் சந்தித்துப் பேசியதைத் தொடர்ந்து நேற்றுக் காலை இரு தரப்பினரும் கூட்டணி தலைமை அலுவலகத்தில் சந்தித்துப் பேசினர்.

இப் பேச்சுவார்த்தைகளில் தமிழர்விடுதலைக் கூட்டணிச் செயலாளர்நாயகம் திரு. அ. அமிர்தலிங்கம், மானிப்பாய் எம். பி திரு. வி. தர்மலிங்கம், கோப்பாய் எம். பி. திரு. எஸ். கதிரவேலுப் பிள்ளை, யாழ் எம். பி. திரு. வெ. யோகேஸ்வரன் திரு. மு. ஆலாலசுந்தரம், இளைஞர் பேரவைத் தலைவர் திரு. சந்ததியாரும் மற்றும் சில இளைஞர்களும் கலந்துகொண்டனர்.

### தனிவழி செல்வதா?

தமிழ் இளைஞர் பேரவையினர் தமிழர் விடுதலைக்கூட்டணியின் தலைமையை விடுத்துத் தனிவழி செல்வதென்று தீர்மானம் எடுக்கப்பட்டிருப்பதாகக் கூறப்படுவதைத் திரு அமிர்தலிங்கம் இப் பேச்சுவார்த்தைகளில் வெகுவாகக் கண்டித்ததாகத் தெரிகிறது.

இதற்கு இளைஞர்பேரவைத் தலைவர் திரு. சந்ததியார் பதிலளிக்கையில் தமிழர் விடுதலைக்கூட்டணியின் தலைமைபீடத்தை இளைஞர் பேரவை இன்னமும் ஏற்றுக் கொண்டுள்ளதென்றும் ஆனால் வட்டுக்கோட்டைத் தீர்மானம், ஆவரங்கால் மாநாட்டுத் தீர்மானம் ஆகியவற்றில் இன்னமும் கூட்டணியினர் செயல்படுத்தாமலிருக்கும் தீண்டாமை ஒழிப்பு, தமிழ் மண் காப்பதுபோன்றவைகளைச் செயல்படுத்துவதிலேயே தனிவழியைப் பின்பற்றத் தீர்மானித்திருப்பதாகத் தெரியவருகிறது.

### நிலைமையை விளக்கினர்

திரு. அமிர்தலிங்கம் இன்றுள்ள அரசியல் சூழ்நிலைகளையும் வெளிநாடுகளிலுள்ள அரசியல் நிலவரங்களையும் தமிழர் விடுதலைக்கூட்டணியினர் எதிர்நோக்கிய, எதிர்நோக்கும் பிரச்னைகளையும் விரிவாக எடுத்து விளக்கியதாகவும் ''தம்பிமார்கள் அவசரப்பட்டு விடக்கூடாது'' என்று ஆறுதல் கூறியதாகவும் அறியப்படுகிறது.

தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைமையிலிருந்து தாம் விலகிக்கொள்ளத் தீர்மானிக்கவில்லையென்றாலும் சில விஷயங்களில் தாம் தனிவழி செல்வதென்று எடுத்தமுடிவை இப்போதைக்கு மாற்றிக் கொள்ள முடியாதிருப்பதாக இளைஞர் பேரவையினர் தெரிவித்ததாகவும் அறியப்படுகிறது.

### ஒன்றுசேர்ந்து அனுஷ்டிப்பர்

ஜனவரிமாதம் பத்தாம் திகதி யாழ்ப்பாணத்தில் உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டில் உயிரிழந்த பதினொரு பேரின் நினைவாக அனுஷ்டிக்கும் அஞ்சலி வைபவத்தை கூட்டணியும் இளைஞர்பேரவையும் இணைந்தே செய்யுமென்று தெரிகிறது.

### உள்ளூராட்சி மன்றத் தேர்தல்

எதிர்வரும் உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களில் தமிழர் விடுதலைக் கூட்டணி போட்டியிடக் கூடாதென்று தமிழ் இளைஞர் பேரவையினர் வற்புறுத்தியதாகவும் இதற்கு இப்போது அவசரப்படத் தேவையில்லையென்றும் சந்தர்ப்பம் வரும்போது இது பற்றி ஆலோசித்து தீர்மானிக்கலாமென்று திரு. அமிர்தலிங்கம் பதிலளித்ததாகவும் தெரிகிறது.

இப் பேச்சுவார்த்தைகளில் தமிழீழத் தீர்மானம் பெரிதும் இளைஞர் பேரவையிலிருந்து கிளம்பியதாகவும் சில சமயங்களில் பேச்சுவார்த்தைகள் உச்சக்கட்டத்தை அடைந்து காரசாரமான வார்த்தைகள் பரிமாறப்பட்டதாகவும் அறியப்படுகிறது.

## 'கிராம, பட்டினசபைக்குப் பதிலாக கிராமகவுன்சில்'

[கொழும்பு]

கிராமசபை, பட்டினசபைகளுக்குப் பதிலாக நாடு முழுவதும் 250 கிராமக்கவுன்சில்களை அமைக்குமாறு சிபார்சு செய்யப்பட உத்தேசிக்கப்பட்டுள்ளது.

மாநகரசபை, நகரசபைப் பகுதிகளைத் தவிர்ந்த பகுதிகளில், கிராமக் கவுன்சில்கள் அமைக்கப்படவிருக்கின்றன.

இதற்கெனக் கிராமசபை எல்லைநிர்ணயக்குழு, திரு. ஜோர்ஜ்லி மொராகொட தலைமையில் நியமிக்கப்பட்டுள்ளது

ஆணைக்குழு 18 மாவட்டங்களில் நேரடியாக ஆலோசனைகளைப் பெறவிருக்கிறது. இம் மாதம் 8ம் தேதி இரத்தினபுரியில் குழு கூடும். [க-அ]

## துப்பாக்கிச்சூட்டில் 6 தொழிலாளர் காயம்

### ரஜவல தோட்டத்தில் சம்பவம்

[வத்துகாமம்]

குண்டசாலைத் தொகுதியிலுள்ள ரஜவலடிவிஷன் தோட்டத்தில் கடந்த 29ந்திகதி முதல் வேலைநிறுத்தம் செய்துவரும் சுமார் 1000 தொழிலாளர்களுக்கும் தோட்ட நிர்வாகத்தினருக்கும் இடையே ஏற்பட்ட தகராறினைத் தொடர்ந்து சனியன்று இடம்பெற்ற துப்பாக்கிச்சூட்டில் 6 தொழிலாளர்கள் காயமடைந்தனர்

காயமடைந்த தொழிலாளர்கள் தெல்தெனிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இச்சம்பவத்தையடுத்து ரஜவல டிவிஷன் தோட்டப் பகுதியில் ஏற்பட்ட பதட்ட நிலைமையை தெல்தெனிய பொலிசார் கட்டுப்பாட்டுக்குக் கொண்டுவந்துள்ளனர். [ஊ-அ]

இப்பத்திரிகை [illegible] யாழ்ப்பாணம் [illegible] வீதி 63- இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 1979-ம் ஆண்டு ஜனவரி மாதம் 2 ந்திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

The Melanaadu Post Box No: 40, Telegram Melanaadu [illegible] Registered as a Newspaper in SriLanka

## கணபதி ஹோமம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் வண்-கிழக்கு கந்தர்மடம் ஸ்ரீ சித்திவிநாயகர் தேவஸ்தானத்தில் நாளை அதிகாலை ஐந்து மணிக்கு சஜமுக சூரசம்மார உற்சவமும் நாளை மறுதினம் வியாழக்கிழமை காலை கணபதி ஹோமமும் நடைபெறும்.

கடந்த மாதம் 15-ம் திகதி இங்கு ஆரம்பமாகி சிறப்பாக நடைபெற்றுவரும் விநாயகர் விரதம் வியாழக்கிழமையுடன் பூர்த்திபெறும்.

நாளை காலை ஐந்து மணிக்கு சஜமுகசூர சம்மார உற்சவமும் அதனைத் தொடர்ந்து பிராயச்சித்த அபிஷேகமும் நடைபெறும்.

விநாயகருக்குரிய விசேஷ தினமான விநாயகர்சஷ்டி தினமான எதிர்வரும் வியாழக்கிழமை, விசேஷ ஹோமத் திரவியங்களால் விநாயகருக்கு ஹோமம் நடத்தப்படும்.

கணபதி ஹோமத்தைப் பின்பற்றி அதிகாலை நான்கு மணிக்கு அபிஷேகம் ஆரம்பமாகும்.

## ஆனந்தனின்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கொள்ளாமல் ஆசனத்தில் அமர்ந்து சத்தான பழரச பானங்களை அருந்தவும் ஆடைகளை மாற்றிக்கொள்ளவுமே ஓய்வு நேரத்தைப் பயன்படுத்தி வருகின்றார்.

### தளர்ச்சி சிறிது காணப்பட்டாலும்...

நேற்று இரவு ஆழிக்குமரன் ஆனந்தன் சற்றுத் தளர்ச்சியாகக் காணப்பட்டபோதிலும் ரசிகர்களுக்கு அதனைக் காட்டிக்கொள்ளாமல் தொடர்ந்து பாடிக்கொண்டு 'டுவிஸ்ட்' ஆடிக்கொண்டிருந்தார்.

### ரசிகர்களின் பேராதரவு

ஆனந்தனின் சாதனையை நேரில் கண்டுகளிக்கவும், அவருக்கு உற்சாகமூட்டவும் ஆயிரக்கணக்கில் திரண்டிருந்த ரசிகப் பெருமக்கள் இங்கு கூடி நின்று பெரும் ஆதரவு அளித்து வருகின்றனர்.

இவர்களும் பிரிய மனமில்லாமல் மெய்மறந்து நிற்பதைக் காணக்கூடியதாக விருக்கிறது.

### மனைவி ஆடிய 'ஷேக்' நடனம்

ஞாயிறு நள்ளிரவு சரியாக 12 மணி 17 நிமிடமளவில் உலக சாதனையை முறியடித்து புதிய உலக சாதனையை ஆனந்தன் நிலைநாட்டத் தொடங்கியதும் ...... நிமிடக் கணக்கை நெஞ்சுக்குள் 'அசைவு' போட்டு துடித்துக் கொண்டிருந்த ஆனந்தனின் மனைவி மானெல் உள்ளக்களிப்பில் தன்னையே மெய்மறந்து, மேடையில் ஏறி, கணவருடன் 'ஷேக்' நடனமாடத் தொடங்கியதும் முழு கால்பேஸ 'டுவிஸ்ட்' ஆடத் தொடங்கிவிட்டது! ரசிகப் பெருமக்கள் மகிழ்ச்சி தெரிவித்து ஆடத் தொடங்கி விட்டார்கள்!

## இந்திரா...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

டம் அடகுவைக்கப்பார்க்கிறது'' என்று திருமதி இந்திரா காந்தி கண்டனம் தெரிவித்தார்.

இங்கு நடைபெற்ற கூட்டம் ஒன்றில் பேசிய அவர் ஜனதா கட்சி அரசின் பொருளாதார, வெளிநாட்டுக் கொள்கைகளை வன்மையாகக் கண்டித்தார்.

உருப்படியானதிட்டம் எதுவும் அரசிடம் இல்லை'' என்று அவர் சொன்னார். [ஊ]

## கைத்தறி...

(1-ம் பக்கத் தொடர்ச்சி

இறக்குமதி செய்யப்பட்டு வருவதனால் உள்ளூர்க் கைத்தறிப் புடவைகளின் கிராக்கி குறைந்துள்ளதோடு அவை விற்கப்படாமல் தேங்கிக் கிடக்கின்றன. இதனால் இந் நெசவாலைகள் நஷ்டத்தில் இயங்கி வருவதால் அவற்றை மூடிவிட வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டுள்ளதென்று கைத்தறி நெசவு உற்பத்தியாளர்கள் அறிவித்துள்ளனராம்.

இந் நெசவாலைகள் மூடப்படுமானால் அவற்றில் பணிபுரியும் ஆயிரத்துக்கும் மேற்பட்ட இளம் பெண்கள் வேலை இழக்க வேண்டிய நிலை ஏற்படும் என அஞ்சப்படுகின்றது.

இது சம்பந்தமாக வடபகுதி கைத்தறி நெசவு உற்பத்தியாளர்கள் ஜனாதிபதி திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தனாவிடம் முறையிட்டுள்ளனர்.

## மரண அறிவித்தல்

### கணபதிப்பிள்ளை சோமசுந்தரம்

ஐயனார்கோவிலடி வண்ணார்பண்ணையைச் சேர்ந்த பிரபல வர்த்தகர் கணபதிப்பிள்ளை சோமசுந்தரம் காலமானார். அன்னாரது பூதவுடல் 17/3 ஐயனார் கோவிலடி இல்லத்திலிருந்து தகனக்கிரியைக்காக 2-1-79 செவ்வாய் மாலை 3 மணிக்கு கோம்பயன்மணல் மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும் நண்பர்களும் உறவினர்களும் இவ்வறிவித்தலை ஏற்றுக்கொள்ளும்படி வேண்டப்படுகின்றனர். 1216